# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 25 வெள்ளிக்கிழமை (10-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:281


### பொருளாதாரத் தடை, ஆயுதக் களைவு தொடர்பாக

# யாழ்.மாவட்ட எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றில் முத்தரப்புப் 'போர்'!



கொழும்பு,நவ.10

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக வருவதற்கு சுமார் ஒருமாத காலத்திற்கு முன்னர் அங்கு தேர்தல் காலத்தில் 'அடிபிடிபட்ட' மூன்று கட்சிகளைச் சேர்ந்த மூன்று எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றத்திலும் பெரும் சொற்போர் நடத்தி மோதுப்பட்டனர்.

இவர்கள் மோதுண்ட வேளைகளில் சபையில் பிரசன்னமாக இருந்த அரசாங்க, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சிங்கள எம்.பிக்கள் கரகோஷம் செய்து கூச்சலிட சபையில் இரண்டு தடவைகள் பெரும் அமளி துமளி உண்டானது.



நாடாளுமன்றம் சம்பிரதாயமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட முதலாவது நாளிலேயே சபையில் 'போரிட்ட' பெருமையை தமிழ் எம்.பிக்களே தட்டிக் கொண்டனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகிய மூவருமே சபையில் சொற்போரில் ஈடுபட்டு மோதுண்டவர்கள் ஆவர்.

அவசரகாலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்றுப் பிற்பகலில் இடம்பெற்ற வேளை முதலில் உரையாற்றிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் -



யாழ்.மாவட்டத்தில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். கடந்த 20 வருடங்களாக அங்குள்ள மக்கள் அளவற்ற துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்கு உணவு, மருந்துப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கத் தரைவழிப் பாதையைத் திறக்க வேண்டும் - என்று சொன்னார்.

அவ்வேளை குறுக்கிட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் எஸ்.தவராஜா-

(10ஆம் பக்கம் பார்க்க)

### நாடாளுமன்றில் ஜனாதிபதி அறிவிப்பு

# விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயார்; நிபந்தனைகளை அவர்கள் அறிவிக்கட்டும்!

## பயங்கரவாதத்துக்குப் பதிலடி தொடரும்; வடக்கு – கிழக்குக்கு நிர்வாக சபை


கொழும்பு,நவம்பர்10

**★ தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் தயார். ஆனால் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நிபந்தனைகளை அறிவிக்க வேண்டும். அவை குறித்து சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வர இயலும்.**

**★ அதுவரைக்கும் பயங்கரவாத யுத்தத்துக்கு பதிலடி கொடுக்கும் திட்டம் கைவிடப்படமாட்டாது.**

**★ அரசியல் தீர்வுக்கு முன்னர், வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் முகமாக இடைக்கால நிர்வாக சபை நிறுவப்படும்.**

**நாடாளுமன்றத்தை நேற்றுச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து, கொள்கை விளக்கவுரை ஆற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்ட மூன்று முக்கிய தகவல்களையும் தெரிவித்தார்.**



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுமார் 80 நிமிட நேரம் ஆற்றிய உரையின் மற்றும் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மத்தியஸ்தம் வகிக்க நோர்வே முன்வந்துள்ளது. பேச்சை ஆரம்பிப்பதற்குச் சில நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நோர்வே தெரிவித்துள்ளது. அந்த நிபந்தனைகள் எவை என்று தீர்மானிக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது குறித்து முடிவு செய்வதற்கு முன்னர் அவர்களின் கடந்தகாலச் செயற்பாடுகளை அவதானிக்க வேண்டும். எமது இந்த நிலைப்பாட்டை சகலரும் ஏற்பார்கள் எனக் கருதுகிறேன்.

கடந்த 15 வருடங்களாக பல்வேறு அரசாங்கங்களை ஏமாற்றி வந்தது போல் என்னையும் ஏமாற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நிறைவேறியது

கொழும்பு,நவ.10

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 98 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 113 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

வழமையாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்படும் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணையை

(10ஆம் பக்கம் பார்க்க)

## யானைக் குட்டிகள் புடைசூழ ஜனாதிபதி அழைத்துவரப்பட்டார்

கொழும்பு,நவ.10

அதி உச்ச பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் பதினொராவது நாடாளுமன்றத்தின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று அமைதியாக நடைபெற்றது.

குதிரைப்படை, குட்டி யானை அணி ஆகியவற்றின் அணிவகுப்புடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். அவர் வந்திறங்கிய நாடாளுமன்ற வாசலில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பயணச் சீட்டு நாளை விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.10

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவைக்கான பயணச் சீட்டுக்கள் நாளை முதல் வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை (றான்) அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று இறுதிச் சடங்கு

படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறவுள்ளன.

அவரது பூதவுடல் இன்று பிற்பகல் 3மணிக்கு மொறக்கொட்டாஞ்சேனையில் உள்ள குடும்ப மயானத்தில் அவரது தாயாரின் சமாதிக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்படும்.

நிமலனின் உடல் நேற்று மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையானோர் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலைகள் இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்தும் குறைந்து காணப்பட்டது. (ஐ-8-ரி)

## தமிழறிஞர் சிவபாதசுந்தரம் காலமானார்

யாழ்ப்பாணம்,நவ.10

முதுபெரும் தமிழ் அறிஞரும், பத்திரிகையாளரும், ஒலிபரப்புக் கலைஞருமான சோ.சிவபாதசுந்தரம் தமது 88ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு லண்டனில் காலமானார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தவராஜா எம்.பியானார்

கொழும்பு,நவ.10

புதிதாக நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரதிச் சபாநாயகர் சரத் முனசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவான ஈபிடிபி. நாடாளுமன்ற உறுப்பினர் கந்தையா சங்கரன் பதவி விலகி

(10ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாள் மீண்டும் இந்தியாவில் தஞ்சம்?

கொழும்பு,நவ.10

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பியுள்ளார் என்று கூறப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார். ஜனாதிபதி சந்திரிகா

(10ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தை ரெலோ நேற்றுப் பகிஷ்கரித்தது!

கொழும்பு,நவ.10

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வையும், ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையையும் ரெலோ பகிஷ்கரித்தது.

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளைத் தடுக்க அரசு தவறியதைக் கண்டித்தும் -

படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(09-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ 523,084**

**நாகம்ஸ்** சுன்னாகம்

அஜித் (இரு வேடம்), சிம்ரன், விவேக் நடித்த

**வாலி**

(ரீல்ஸ்) காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே)

(80401)

**ராஜா** யாழ்ப்பாணம்

பிரசாந், ரம்பா, மணிவண்ணன், ராதிகா

மற்றும் பலரின் நடிப்பில்

**பூமகள் ஊர்வலம்**

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)

(C/13648)

**லஷ்சுமி சினிமா** இணுவில்

விஜய், ரம்பா நடித்த

**மின்சாரக் கண்ணா**

ரீல்ஸ்

காட்சிகள்:10.30, 2.30 (ப.நே.)

15.11.2000 தொடக்கம்

**சுதந்திரம்**

(80390)

# இதய அஞ்சலிகள்

எமது அன்புத் தோழி

**விஜித்தா வலன்ரைன்**

அவர்களின் பாசமிகு சகோதரன்

**அன்ரன் கொன்சன்ரைன் வலன்ரைன்**

07.11.2000 செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணம் அடைந்ததை யிட்டு அவரது இழப்பால் துடிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கு கின்றோம்.

**2002 வர்த்தகப் பிரிவு**
**தோழிகள்**

(80387)

**புலமைப்பரிசில் - 2001**

13-ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

* உ.நிவேதிகா -168
* கு.பௌசனா -157
  (யாழ்.சுண்டிக்குளி ம.க.)
* இ.கதுஷா -157
* கு.லஜிந்தன் -155
  (யா/இ.ஆ.பா)
* உ.பிரியங்கா -153
  (யா/இ.ஆ.பா.)

**அடுத்த பரீட்சை**

**12.11.2000**

**BOND** யாழ்நகர்

(80382)

# JAFFNA COLLEGE CAROL SERVICE

All are cordially invited to
"Adoration - A Christmas Cantata"
(A service celebrating The Birth of Jesus Christ)

**Presented by Jaffna College**
at the Cathedral, Vaddukoddai
on
**12.11.2000, Sunday,**
**at 3.30 p.m. (S.L.T)**

*JAFFNA COLLEGE,*
*VADDUKODDAI.*

(C/13772)

**Rev.Anthony A.Paul**
**PRINCIPAL**

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 26ஆம் நாள் நாளை (11.11.2000) சனிக்கிழமை காலை 10.30 முதல் 12.30 மணிவரையுள்ள பரணி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

நல்லூர் முத்திரைச் சந்தை
**திரு.திருமதி பரமசாமி தம்பதிகளின்**
புத்திரன் திருநிறை செல்வன்
**பரமேஸ்வரன் (வவா)**
அவர்களுக்கும்

இராமநாதபுரம், கிளிநொச்சி
**திரு.திருமதி சோமசுந்தரம் தம்பதிகளின்**
புத்திரி திருநிறை செல்வி
**சிவறஜனி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் நடத்த திருவருள் கைகூடியிருப்பதால் திருமணம் சுவிட்சர்லாந்தில் உள்ள Eisenwerk கல்யாண மண்டபத்தில் நடைபெறும். அச் சுபமங்கள வேளையில் மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**சண்முகலிங்கம் - ராஜேஸ்வரி குடும்பத்தினர்**

நல்லூர் முத்திரைச் சந்தை,
யாழ்ப்பாணம்.

(80375)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலி தென்மேற்கு - மானிப்பாய் பிரதேசசபை தலைமையகத்தில் பட்டதாரி அபிவிருத்தி உதவியாளராக (D.A) கடமையாற்றி,



உள்ளூராட்சி உதவியாளராக
(L.G.A)
பதவி உயர்வு பெற்றுள்ள
**திரு.செல்வராசா ரமேஷ்** J.P.
B.A.(ECON.)Hons.,
Cert.Coun.(A.H.C)

அவர்களை மென்மேலும் உயர்வுகளைப் பெற்றுப் பணிபுரிய எம் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பத்திரிகைத்துறை நண்பர்கள்.**

(C/13773)

# பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி

## 2001 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

**(பொதுச் சந்தை, இறைச்சிக்கடைகள்)**

பருத்தித்துறை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2000.11.24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப் பத்திரப்பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 2000.11.23 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களைப் பூரணப்படுத்தி 'தலைவர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி' என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு, அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 2000.11.24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது குறித்த நேரத்துக்கு முன்னர் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 2000.11.24ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ, பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரம் பெறுபவர்கள் அடையாள அட்டையையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரமுண்டு. இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 01) மந்திகை மாட்டிறைச்சிக்கடை | 153,100 /- | 3,000 /- | 150 /- |
| 02) மாணாண்டி மாட்டிறைச்சிக்கடை | 65,700 /- | 3,000 /- | 150 /- |
| 03) மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | 16,800 /- | 1,500 /- | 150 /- |
| 04) அல்வாய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 15,300 /- | 1,500 /- | 150 /- |
| 05) மந்திகைச் சந்தை | 105,100 /- | 1,500 /- | 150 /- |
| 06) மாணாண்டிச் சந்தை | 50,010 /- | 1,500 /- | 150 /- |
| 07) கற்கோவளம் சந்தை | 3,700 /- | 500 /- | 150 /- |
| 08) கெருடாவில் சந்தை | 1,500 /- | 500 /- | 150 /- |
| 09) பொற்பதி மீன் சந்தை | 50,000 /- | 1,500 /- | 150 /- |
| 10) மணற்காடு மீன் சந்தை | 25,000 /- | 1,500 /- | 150 /- |

*தலைமை அலுவலகம்,*
*பருத்தித்துறை பிரதேசசபை,*
*புலோலி*
*09.11.2000*

(C/13769)

**பரஞ்சோதி இரவீந்திரன்,**
உபதலைவர்,
பருத்தித்துறை பிரதேசசபை

# திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்

## THIRUNELVELY YOUNG MENS HINDU ASSOCIATION

(T.Y.M.H.A)

*மேற்படி சங்கத்தின் 89ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் கிரிக்கெட் / மேசைப்பந்தாட்டம் / கரம் ஆகியவற்றின் வெற்றிக்கிண்ணத் துக்கான மாபெரும் சுற்றுப்போட்டி*

**மேற்படி சுற்றுப் போட்டிகள்**

எமது சங்கத்தால் நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை எமது சங்கத்தில் காலை 9.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

* கிரிக்கெட் போட்டியானது 12 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், 7பேர் கொண்டதாகவும் அமையும்.

** கரம் / மேசைப்பந்து சுற்றுப்போட்டிகள் (ஆண்-பெண்) ஒற்றையர், இரட்டையர், கலப்பு இரட்டையர் கொண்டதாக அமையும்.

*** சிறப்புச் சுற்றுப்போட்டியாக 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியானது 12 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் 7 பேர் கொண்டதாகவும் அமையும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 17.11.2000

(80391) - விளையாட்டுத்துறைச் செயலாளர்

**நீங்கள் எதிர்பார்த்த 2001 கலண்டர் வந்துவிட்டது**

கொம்பிலிமென்ற (Complement) அடித்துக் கொடுக்கக்கூடிய கலண்டர் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**சந்தியா மலர் கோட்யாட்**

பிரதான வீதி,
சங்கானை.

(80250)

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

# முகமும் மனமும் சொல்லும் செயலும் ஒருங்கே இசைந்த எங்கள் பெருமகன்

**அமரரான, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் பிறந்தநாள் இன்று; அதனையொட்டி அவர் நினைவுகளை மீட்கிறது இந்தக்கட்டுரை.**

*'முகமும் மனமும்*
*சொல்லும் செயலும்*
*மணியாய் இசைந்த மகாநுபவ'*
*எங்கள்*
*மனதுள் நெருங்கிய தலைவ*
*மகிழ்வாய் இனிதே வாழி'*

எங்கள் பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் அ.துரைராசா அவர்களுக்கு பிரியாவிடை தந்த பொழுதில் பிறந்தது இந்த வாழ்த்து. இந்த வாழ்த்தை தொடர்ந்து சில நாள்களுக்குள்ளேயே

*'ஊனினை உருக்கி*
*உலகுக்கொலியான*
*உன்னதனே*
*உங்கள்*
*பொன்னடி போற்றி ஐயா!'*

என பிரியும் விடை தரும் கொடுமையும் நிகழும்.

ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தன இடையில் பல அலைவுகள்; மீள் உயிர்ப்புக்கள். கூடவே எங்கள் பேராசிரியர் துரைராசா அவர்கள் நினைவும், அவர் எமக்குத் தந்த நம்பிக்கை போல் காக்கப்பட்டுள்ளது.

உலகப்புகழ் பெற்ற ஒரு பெரும் கல்வியாளன் மண் பொறியியல் **(Soil Engineering)** ஆய்வில் மகத்தான கண்டுபிடிப்புகளை செய்த விஞ்ஞானி, வெறும் 'மண்' ஆய்வோடு முடங்கி விடாமல் இந்த மண்ணின் மக்களை மேம்படுத்தும் சமூகப் பொறியியலாளனாக **(Social Engineer)**வும் விளங்கிய தன்மையினால் தான், அனைத்து மக்களினதும் அன்



புக்குரியவர் ஆகின்றார்; நினைவில் நிலைத்து நிற்கின்றார்.

1934ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் நாளில், யாழ்ப்பாணத்தின் மரபு வழி கிராமமான இமையாணனின் எங்கள் 'துரை'யின் தோற்றம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனில் ஆரம்பக் கல்வி; ஹாட்லிக் கல்லூரியில் உயர்தரக் கல்வி. 1953இல் இயந்திரவியல் பட்டதாரி மாணவராக இலங்கை பல்கலைக்கழகத்தில் அவரின் சாதனைகள். முதன்மை சித்தியுடன் பின்னர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்து பட்டபின் படிப்பு.

புகழ் பூத்த பேராசிரியரான றோஸ்கோ **(Prof.K.H.Roscoe)** அவர்களின் வழிகாட்டலில் மண் பொறிமுறையியல் துறையில் கலாநிதி பட்ட ஆய்வை நிறைவு செய்தார் எங்கள் துரைராசா. உலகப் பல்கலைக்கழகங்களில் 'துரையின் கோட்பாடு' என்ற பெயரில் அவரின் ஆய்வு முடிவுகள் இன்றும் நிலை பெறும்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் பேராதனையில் அமைந்த இயந்திரவியல் பீடத்திலும் தொடர்ந்து திறந்த பல் கலைக்கழக குடிசார் இயந்திரவியல் புலத்திலும் விரிவுரையாளராக, பேராசிரியராக பீடாதிபதியாக பணிபுரிந்த பேராசிரியர் துரைராசா அவர்கள் உலகின் பல பல்கலைக்கழகங்களும் அதிதிப் பேராசிரியராகவும் அறிவுப் பயணங்களை மேற்கொண்டு இருந்தார்.

அவரது அறிவுப் பயணத்தில் மைல் கல்லாக எங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான அவர் வருகை அமைந்து சிறந்தது. பல்கலைக்கழகங்கள் தந்த கோபுரங்கள் ஆகவும், அதன் உயர் அதிகாரிகள் மக்கள் நெருங்க முடியாத உச்சங்களாகவும் நிலவிய பொதுவான மரபு, எங்கள் பண்பாட்டு புலங்களில் இயல்பாகவே மாற்றம் கண்டது. இந்த மாற்றத்தின் கனியாக, அர்த்தமுள்ள வாழ்வு கண்டவர் பேராசிரியர் துரைராசா அவர்கள்.

'ஒருவரிடம் அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள் அப்பொழுது தான் அவரின் சுயரூபம் தெரியும்' என்பார்கள். பேராசிரியரைப் பொறுத்த வரையில் மரபு வழி அதிகார - நிர்வாக கோட்பாடுகள் எல்லாம் அர்த்தம் இழந்து போக, அன்பும் பொறையும், ஆழ்ந்த அர்ப்பணிப்புமே பண்பாக ஒருவித அருளாட்சியாகவே அவரின் நிர்வாகப் பாங்கு அமையும். அவரது காலத்து, அவரோடு வாழவும், அவர் பணிகளில் கூடிச் செயல் புரியவும் எங்களுக்கு கிடைத்த வாய்ப்பும் அனுபவமும், இன்றும் எங்கள் பணிகளில் எங்களை வழிநடத்தி நிற்பது.

பல்கலைக்கழகம் கண்ட மேம்பாடுகள் பல; அதேவேளை எங்கள் சமூகத்துக்கு மேம்பாட்டுக்காய் அவர் கொண்ட ஆர்வப் பணிகளோ காலத்தினால் செய்த உன்னதங்கள்.

இன்று வரை தொடரும் கொடிய போரும், அழிவும் அலைவும் அறிவுத் துணிவு கொண்ட எங்கள் பேராசிரியரின் அர்த்தமுள்ள வாழ்வினை நெஞ்சில் நிலை நிறுத்தி நிற்பன; எங்கள் வாழ்வுக்கான திசையை காட்டி நிற்பன.

எளிமையான - அந்தச் சிரிப்பு, அவர் மனதை அப்படியே பிரதிபலித்து நிற்பது. சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்த நவீன வாழ்வின் மூடுதிரைகளை அறியாத, அதேவேளை எந்த ஒரு நிலையிலும் தளராத தர்மயோகியான அவரது ஆளுமை உன்னதமானது.

நான் கண்ட, நாங்கள் கண்ட மகாநுபவர் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள். ★

**கலாநிதி என்.சண்முகலிங்கன்**
**தலைவர், அரசறிவியல்,**
**சமூகவியல்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.10

வடமாநில இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் சுமார் 100 பாடசாலைச் சிறுவர்களுக்கும் ஏனையோருக்கும் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

பாடசாலை அதிபர் கி.சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க. பொன்னம்பலம் கலந்து கொள்வார்.

## பாராட்டு விழா

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபரும் சமூக சேவையாளருமாகிய ந.சிவகடாட்சம் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு கோப்பாய் வடக்கு, மத்தி பொது மன்றங்கள் இணைந்து அவருக்கு பாராட்டு விழா நடத்தவுள்ளன.

சமூக சேவா சங்கத் தலைவர் க.இ.குமாரசாமி தலைமையில் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சரவணபவானந்த வித்தியாலயத்தில் இந்த விழா நடைபெறும்.

விழாவில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ பூரண கீதச் சந்திர குருக்களும் வாழ்த்துரைகளை கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், கோப்பாய்க் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், ஆறு.திருமுருகன்,கோப்பாய்வடக்கு மத்தி கிராம உத்தியோகத்தர்களான செ.செல்வச்சந்திரன் கே.ஜே. இரத்தினராசா ஆகியோரும் வழங்குவர். (இ-72)

## திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம்,நவ.10

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தன்று நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு, முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.10

வலி.வடக்கு ஓய்வூதியர் நலன் புரிச்சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

**குறிப்பு:-** இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறிய வந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| **08.11.2000 (புதன்கிழமை) வரை கிடைத்த நிதி:-** | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 411,346 |
| 01. டாக்டர் ஏ.நடராஜா - ராஜமணி இல்லம் (வங்கியூடாக) வதிரி, கரவெட்டி | - 500 |
| 02. யூ.கே. தொலைத் தொடர்பகம் - நெல்லியடி, கொடிகாமம் வீதி, கலிகை, கட்டைவேலி | - 1,000 |
| 03. ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், வரதர் அணி யாழ். | - 15,000 |
| 04. சி.திசாந்தன், பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கு | - 1,000 |
| 05. க.பேரின்பநாதன், 103,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். | - 201 |
| 06. அதிபர், ஆசிரியர்கள், தென்மராட்சி வலய இணைக்கப்பட்ட ஆசிரியர்கள், யாழ். கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் | - 1,640 |
| 07. ஒரு நண்பன் போக்காலலேன், உடுப்பிட்டி | - 500 |
| 08. ம.நிமால், யாழ்ப்பாணம் | - 220 |
| 09. யாழ். கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவு சங்கம், 957, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | - 5,001 |
| 10. மாவடி விநாயகர் அடியார், மீசாலை. | - 500 |
| 11. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில், புலோலி | - 2500 |
| 12. முருகன் கோயில், சுதுமலை | - 500 |
| 13. வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம், யாழ்ப்பாணம் | - 5000 |
| 14. A/L 2001 வர்த்தக பிரிவு மாணவர்கள், யாழ். இந்துக்கல்லூரி | - 600 |
| 15. ச.வித்தியாகரன், யாழ்ப்பாணம் | - 200 |
| 16. ஓர் அன்பர், நவாலி தெற்கு, மானிப்பாய் | - 200 |
| 17. எம்.ஏ.ராஜரட்ணம், சங்கானை | - 500 |
| 18. ஜனசக்தி சனசமூகநிலையம், அரசடி றோட், நல்லூர் | - 1,000 |
| 19. தீவக கல்வி வலயம், தீவகப் | - 5,100 |
| 20. ஐக்கிய தீப சனசமூக நிலையம், நெடுந்தீவு | - 1,000 |
| 21. உடன்பிறவாத சகோதரி, மறவன் புலோ மேற்கு | - 200 |
| 22. முகாமையாளரும் ஊழியர்களும், தேசிய சேமிப்பு வங்கி, யாழ். கிளை | - 5,300 |
| 23. ஓர் அன்பர், சங்கரத்தை, வட்டுக்கோட்டை | - 100 |
| 24. அதிபர், ஆசிரியர்கள், யாழ். கட்டுவன் புலம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை | - 1,070 |
| 25. கே.குணபாலன், கோண்டாவில் மேற்கு (வங்கியூடாக) | - 100 |
| 26. செல்வி எஸ்.மல்லிகை, கரவெட்டி மேற்கு (வங்கியூடாக) | - 250 |
| மொத்தம் | -460,528 |


## லாலாவின் முதல் அதிர்ஷ்டசாலி

**வாசிநாதன் - வாசுகி**
**7ஆம் ஆண்டு மாணவி**
**ஸ்கந்தவரோதயா, கந்தரோடை சுன்னாகம்.**

**இந்த மாணவிக்கு எமது *லாலா சோப் தகடு* அதிர்ஷ்டமாகக் கிடைக்கப்பெற்றது.**
**அவருக்கு லாலாவின் லேடீஸ் குடை இலவசமாக வழங்கப்படுகின்றது. இதனை வழங்குபவர் லாலா சோப் உரிமையாளர் மகன் - வன்னியசிங்கம் விஜயபாலா.**

*லாலா சோப் தொழிற்சாலை*
*அச்சுவேலி.*

***யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்***
நிக்சன் பல்பொருள் வாணிபம்,
அச்சுவேலி.
வேணி களஞ்சியம்,
யாழ்ப்பாணம்.

(C/13756)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 04 - 1929



உதிர்வு 11 - 11 - 1996

அமரர்

## எட்வேட் இராசரத்தினம் ஆசீர்வாதம்

(இளைப்பாறிய உப அதிபர், விக்னேஸ்வரா வித்தியாலயம், நல்லூர் தெற்கு.)

*"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்*
*கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"*

அன்புத் தெய்வமே அருமை அப்பா
ஆண்டுகள் நான்கு கழிந்தாலும் - என்றும்
உம் நினைவு எம்மை விட்டகலாது
உம் ஆத்மா சாந்தி பெற இறைவனடி
இறைஞ்சுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (11.11.2000) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு புனித மரியாள் (O.L.R) ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*திருமதி M.J..ஆசீர்வாதம்,*
*41,இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
**T.P. NO - 2226**

**பிரிவால் வாடும்,**
**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(C/13764)

அச்சுவேலியில்

## ஆங்கில வகுப்புகள்

ஓய்வுபெற்ற அரச ஊழியரினால் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டு ஆவன செய்யப்படும். ஆண்டு 6 இற்கு மேல் A/L வரை யாவருக்கும் ஒரு Batch இல் 10 — 15 மாணவர்கள் மட்டும். ஆங்கிலத்தில் பூரண அறிவுபெற ஆர்வமுள்ளவர்கள் மட்டும். மேலதிக விவரங்களுக்கு சுய விலாசமிட்ட முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் உங்கள் விவரங்களை அறியத் தரவும். வகுப்புகள் செவ்வாய், வெள்ளி தவிர்ந்த வாரத்தில் ஏனைய நாள்களில் பின்வருமாறு நடைபெறும்.

புதிய நேரம் 7.00-8 00. 9 00-10 00, 10.30-11.30 14 00-15 00, 15.30-16 30, 17.00-18.00 மணிகளில். 6 Batch ஆக நடைபெறும்.

நீங்கள் கற்க விரும்பும் நேரத்தையும் வாரத்தில் 3 நாள்களையும் தெரிவு செய்து தற்போது எத்தனையாம் ஆண்டு என்றும் குறிப்பிடுக.

வகுப்புகள் **01-01-2001** இல் ஆரம்பமாகும்.

தொடர்பு:

**விள இல. 1133, மே/பா உதயன்.**

*(80259)*


## சம்பள நிலுவை கிடைக்கும்

*யாழ்ப்பாணம், நவ. 10*

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான சம்பள நிலுவைகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் பிரிவு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கலாசார உத்தியோகத்தர்களுக்கு வழங்கவேண்டிய சம்பள நிலுவைகளின் விவரங்களை உடனடியாக மாகாணக் கல்வி அமைச்சின் கணக்காளருக்கு அறிவிக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ — 7)


# சேவை நலன் பாராட்டு



## அகவை அறுபது காணும் ஆசிரியை
## திருமதி ஜானகி விஸ்வநாத சர்மா

புத்தாயிரமாம் ஆண்டில் தனது அறுபதாவது வயதை அடைந்துள்ளவரான திருமதி ஜானகி விஸ்வநாதசர்மா அவர்கள் 1959ஆண்டு முதல் ஆசிரியப் பணியில் ஈடுபட்டுத் தொடர்ந்து 41 ஆண்டுகளாகக் கடமையாற்றியவர்

இவர் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணிய ஐயர்-பார்வதியம்மா தம்பதிகளின் மகளாவார். இவர் தனது பேரனாரின் வழிகாட்டலில் தனது கல்வியை ஆரம்பித்து, பெற்றோரின் குலவொழுக்கம், பண்பாடு ஆகியவற்றை நெறி பிறழாது கடைப்பிடித்து வாழ்ந்து இந்த ஆண்டில் 60 ஆவது வயதை அடைந்துள்ளார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையிலும், மேற்படிப்பை கனகரெட்ணம் மகா வித்தியாலயத்திலும் (ஸ்ரான்லி) பெற்றவர். தனது படிப்புடன் இசைக் கலைக்கு முதலிடம் கொடுத்து, வ. இ. ச. சபையினரின் ஆசிரிய தரத்திற் சித்தி பெற்று இசையாசிரியராக நியமனம் பெற்றார். இவரது இந்த உயர்வுக்கு ஆணிவேராக இருந்தவர் இசையாசிரியர் சங்கீத பூஷணம் தா. இராஜலிங்கம் என்பதை அவர் என்றும் நினைவு கூர்வதுண்டு.

### இவர் சேவையாற்றிய பாடசாலைகள்

| | வருடம் | | மாதம் |
|---|---|---|---|
| 1. மண்கும்பான் அ. த. க. பாடசாலை-வேலணை | 2 | — | 3 |
| 2. முஸ்லிம் மகளிர் கல்லூரி--யாழ்ப்பாணம் | 2 | — | 6 |
| 3. யா/நல்லூர் ஸ்தான சி. வி த. க. பாடசாலை | 0 | — | 4 |
| 4 யா/இந்து மகளிர் கல்லூரி | 8 | — | 8 |
| 5. பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி | 2 | — | 0 |
| 6. மட்/வாழைச்சேனை அ. த. க. பாடசாலை | 8 | | 6 |
| 7. யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | 11 | — | 6 |
| 8 யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயம் | 5 | — | 6 |

இவர் அந்தண குலத்தவரான காரணத்தால் ''முஸ்லிம், கிறிஸ்தவக் கல்லூரிகளில் எவ்வாறு கடமையாற்ற முடிகிறது''? எனப் பலர் கேட்டபோது, ''எம் மதமும் சம்மதம் எல்லா மாணவரும் என் மக்கள்; ஆசிரியப் பணி மிகவும் புனிதமானது, இதில் எந்த வேற்றுமைக்கும் இடமில்லை. எங்கு கடமையாற்றிடினும் எனது குலப்பெருமையை வழுவாது கடைப்பிடிப்பேன்'' என்று உறுதியாகக் கூறி அவ்வாறே வாழ்ந்தும் காட்டுபவர்.

இவர் தன் பிறந்த வீட்டுக்கு மட்டுமல்ல, புகுந்த வீட்டுக்குமே பெருமை தேடித் தருவதில் ஆர்வமுள்ளவர். இவரது ஆசிரியப் பணிக்கான அறிவுரைகள் வழங்கிய தனது மாமனார் பிரமஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மாவின் அருமை பெருமைகளையெல்லாம் அழிந்து விடாது நிலைநாட்ட இவர் எடுத்த நன் முயற்சியின் பயனாகவே அவரது 25 ஆவது வருட நினைவு விழா சிறப்பாக நடைபெற்றது. இவரைத் தனது இல்லத்தரசியாகப் பெற்றதில் இவரது கணவரும், தாயாகப் பெற்றதில் இவரது மகனும் பெருமையடைவதாக அடிக்கடி கூறுவதை நாம் அறிவோம்.

இவர் இசையாசிரியையாக மட்டுமல்ல, வேறு துறைகளிலும் தனது திறமையைக் காட்டியவர். பாடசாலைக் கலை நிகழ்வுகளில் இவரது திறமைக்கு என்றுமே ஒரு முத்திரை பதிந்திருக்கும். மாணவர்களை நன்கு அரவணைத்து, அறிவுரை வழங்கி நெறிப் படுத்துவதிலே மிகவும் வல்லவர்.

இந்த ஆசிரியையின் சேவை நலன் பாராட்டு விழா இன்று (10-11-2000) வெள்ளிக்கிழமை நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

இவரது சேவை பாடசாலை மட்டத்திலிருந்தும் ஓய்வு பெற்ற போதும், பொதுப் பணிகளில் ஈடுபட்டு, சிறந்த சமய, சமூகப் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நல்லாசி வேண்டுகின்றோம்.

வாழ்க! வளர்க!

பாராட்டுவோர்!

பால முரளீதரக் குருக்கள் குடும்பம்,

**கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

*(சி/13755)*



# யாழ்ப்பாண மாநகர சபை

### வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும்

# பதிவு செய்தல்

## ஆண்டு - 2000

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப்பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30-11-2000 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்தமருத்துவ மூலிகைகள், மருந்துகள்
05. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிகள்
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற் பொருள்கள்
07. கட்டடப் பொருள்கள் (சீமெந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
08. நிந்தைகள், நிறந்திட்டும் பொருள்கள் முதலியன
09. கற்கள், மணல்கள்
10. நீர்வழங்கு பொருள்கள், பி. வி. சி குழாய்கள் முதலியன
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
12. மின்சார இயந்திரப் பொருள்கள், மின்கருவிகள்
13. விறகு, தேங்காய்மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள் உராய்வு நீக்கிகள்—கிறீஸ்
15. இரும்புப் பொருள்கள்
16. பனை மரங்கள், சலாகைகள்
17. நூலகங்களுக்குரிய நூல்கள்
18. வாகனங்களுக்கான பற்றறிகள், ரயர், ரியூப் முதலியன
19. திராந்திகள், நீப்பைகள், பலகைகள்
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால் துடைப்பம், இழைக்கயிறு. தேடாக்கயிறு முதலியன
21. சுத்திகரிப்புப் பிரிவுக்கான கிருமி நாசினிகளும் மருந்துகளும்

## சேவைகள்

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06. ஏற்றிஇறக்கல் வேலைகளும் பாரந்தூக்கும் வாகனங்களும் வாடகைக்கு விடுதல் (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரைக்ரர் வாடகைக்கு விடல்)
07. கோலவுடை தைத்தல்
08. மின்மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம்
09. ஏற்றியிறக்கல் தொடர்பாக மாட்டு வண்டியை சேவைக்கு அமர்த்துதல்
10. மின்கலங்களுக்கு மின்வலுவூட்டுதல்
11. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளொக் தயாரித்தல்
12. வாகனங்கள் சேவிஸ் செய்தல்

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல்கள் சேவைகள் 2000 ஆம் ஆண்டெனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வழங்கல்களுக்கும் தேவைகளுக்குமான விண்ணப்பங்கள் 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். இப்படிவங்களை யாழ். மாநகர சபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 250/- பெறுமதியான, ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையை இணைத்து அனுப்ப வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் எமது நானாவித இறைவரிக்கிளையில் நேரடியாகச் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

இராசா துணிகாசலம்,
பதில் மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
08—11—2000

*(சி/13757)*

பொலிஸ் உயர் அதிகாரி உட்பட:

# 14 கடத்தல் பேர்வழிகளுக்கு சீனாவில் மரண தண்டனை!

பெய்ஜிங், நவ. 10

சுமார் 660 கோடி டொலர்கள் பெறுமதியான பொருள்களைச் சட்டவிரோதமாகக் கடத்திய குற்றத்துக்காக கம்யூனிஸ்ட் கட்சியின்பிரமுகர் பொலீஸ் உயர் அதிகாரி ஆகியோர் உட்பட 14 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கார்கள், ஆடம்பரப் பொருள்கள் பதனிடப்படாத உணவுகள் உள்ளிட்ட 660 கோடி டொலர் பெறுமதியான பொருள்களைச் சீனாவிற்குள் கடத்தி வந்து விற்றதற்காகவும், கடத்தலுக்கு உதவுவதற்காக வஞ்சம் பெற்றதாகவும் அரசு அதிகாரிகள், கம்யூனிஸ்ட் தலைவர்கள் உட்பட 88 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் மீதான விசாரணைகளின் முடிவில் மாவட்டத் தலைவர், சுங்க அதிகாரி, பொலிஸ் உயர் அதிகாரி ஆகியோர் உட்பட 14 பேருக்குச் சீன நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகரும் கடத்தலுக்கு மூல காரணமானவருமான வர்த்தகர் ஒருவர், மரண தண்டனை விதிக்கப்படப் போவதை முன் கூட்டியே பொலீஸார் மூலம் ரகசியமாக தெரிந்து கொண்டு அவர்களது உதவியுடன் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று விட்டார்.

சீனாவில் சட்டவிரோதக் கடத்தல்கள் நகர மாகாண நிர்வாகங்களில் உள்ள உயர் அதிகாரிகள் தொடர்பான ஊழல்கள் போன்றவற்றை அடியோடு ஒழிக்க சீன அதிபர் ஜியாங் ஜெமின் மேற்கொள்ளும் அதிரடி நடவடிக்கைகளில் முக்கியமானதாக மேற்படி வழக்கும் அதன் தீர்ப்பும் கருதப்படுகிறது.

அதேவேளை முக்கிய குற்றவாளி நாட்டை விட்டுத் தப்பப் பொலீஸார் உதவியிருப்பதாகக் கூறப்படுவது அதிபர் ஊழலை ஒழிக்கும் முயற்சியில் எதிர் கொள்ள வேண்டிய சவாலின் பரிமாணத்தைக் காட்டுகிறது. (ஒ-8)


## அறிவித்தல்

### வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [வ/து]

நிதியாண்டு (01 - 01 - 95 / 31 - 12 - 95)

காலத்துக்குரிய கணக்காய்வு

எமது சங்கத்தின் மேற்படி காலத்துக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சங்கத்தின் முன்னைய பணியாளர்கள், அங்கத்தவர்கள் சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் தொடர்புடைய ஏனையவர்களும் (கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) தகுந்த ஆதாரங்களுடன் கணக்கு விவரங்களைச் சமர்ப்பித்து சீர்செய்து உறுதிப்படுத்திக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இன்றில் இருந்து அறிவித்தல் கிடைத்து 14 நாள்களுக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் சங்கப் புத்தகங்களின் படி சரியென ஏற்றுக் கணக்காய்வு முடிவுறுத்தப்படும்.

தலைவர்
ப. தெ வ அ கூ. சங்கம்,
வேலணை.

தொடர்பு கொள்ளும் இடம்,
வேலணை ப. தெ. வ. அ. கூ. சங்கம்
4 ஆம் வட்டாரம்,
அம்மன் கோயில் வீதி. (80389)



### யாழ்ப்பாணம் மாநகரசபை

## அவசர கேள்வி கோரல்

### சீருடை விநியோகம்

பின்வரும் சீருடை வகைகளை விநியோகிக்கக் கூடிய விநியோகத்தர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

இவற்றுக்கான கேள்விகள் யாவும் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது நேரடியாக மாநகரசபை பிரதம கணக்காளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் 23—11—2000 ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன்னர் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

தாங்கள் கேள்வி கோரும் சீருடைத்துண்டுகளின் 6''X6'' அளவிலான மாதிரி சீருடைத்துண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

கேள்விகள் யாவும் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு திறக்கப்படும். எனவே கேள்விக்காரர் கேள்வி திறக்கப்படும் போது தவறாது சமுகமளிக்கவும்.

முக்கிய குறிப்பு:- குறிப்பிடப்பட்ட சீருடைகள் முழுவதும் கட்டளை வழங்கிய திகதியிலிருந்து ஒருமாத காலத்திற்குள் சபையின் களஞ்சியத்திற்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.

01. நரைநிறம் சிறுதெற்றிக் காற்சட்டை துணி — 830 மீ ( Yellow line )
02. நரைநிறம் ( Grey ) புழுலிங் மேலங்கி — 798 எண் ( Colar அற்ற T — Shirt)
03. பட்லின் நீலநிறம் — 56 யார்
04. நீலநிறம் சிந்தெட்டிக் காற்சட்டை துணி — 56 யார் ( Yellow line )
05. இளம் காம்பல் நிற சாறி நைலக்ஸ் — 102 எண்
06. வெள்ளைப் பொலியெஸ்ரர் ( 65X35 Milky way) — 450 மீ
07. பிறவுண் பொலியெஸ்ரர் 65X35 China — 2 மீ
08. நீலம் ,, ,, — 16 மீ
09. பச்சை ,, ,, — 2 மீ
10. வெள்ளை நைலக்ஸ் சாறி — 22 எண்
11. வெள்ளைநிறசிந்தெட்டிக் காற்சட்டை துணி — 44 மீ ( Yellow line )

இராசா தணிகாசலம்,
பதில் மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். (சி/13770)


## இந்தியாவின் 27 ஆவது மாநிலம்

டேராடூன், நவ. 10

இந்தியாவின் 27 ஆவது மாநிலமான உத்திராஞ்சல் நேற்று முன்தினம் நள்ளிரவு உதயமானது.

உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகளை இணைத்து உருவாக்கப்பட்ட இந்த மாநிலத்தின் முதல் ஆளுநராக சுர்ஜித் சிங் பர்னாலாவும், முதலமைச்சராக பா. ஜ. கவின் நித்தியானந்த சுவாமியும் பதவிப்பிரமாணம் மேற்கொண்டனர். (ஒ)

## பத்திரிகையாளர் நல வாழ்வு நிதியம்

புதுடில்லி, நவ 10

போர்மற்றும் பயங்கரவாதச்சம்பவங்கள் நிகழும் இடங்களில் செய்திகளைத் திரட்டும் பணியில் ஈடுபடும் போது உயிரிழக்கும் அல்லது காயமடையும் பத்திரிகையாளர்களுக்கு உதவும் நோக்குடன் நலவாழ்வு நிதியம் அமைக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது. (ஒ)

## ஜெயலலிதாவின் கார் மீது கல் வீச்சு

மதுரை, நவ. 10

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்துவரும் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மதுரை அருங்க ஆண்டிப்பட்டியில் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்ற போது அவர் பயணம் செய்த கார் சரமாரியான கல் வீச்சுக்கு இலக்கானது.

இத் தாக்குதலில் யாருக்கும் காயமேற்படவில்லை என்றும் வாகனம் மட்டும் சிறு சேதத்துக்கு உள்ளானதாகவும் கூறப்படுகிறது. (ஒ-8)

மந்திர ஜால வித்தையால்

## தாஜ்மகால் 2 நிமிடங்கள் பார்வையிலிருந்து மறைந்தது!

காதல் சின்னமாகக் கருதப்படும் தாஜ்மகால் பார்வைக்குப் புலனாகாமல் 2 நிமிடங்கள் இந்திய மந்திர வித்தைக்காரர் பி. சி. சர்க்கார் ஜூனியரால் மறைக்கப்பட்டது.

இறந்துபோன காதலி மும்தாஜுக்காக மன்னன் ஷாஜகான் 16 ஆம் நூற்றாண்டில் கட்டிய தாஜ்மகால் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளது.

தாஜ்மகாலை பார்வையில் இருந்து மறையச் செய்யப் போவதாக உலகப் புகழ்பெற்ற மந்திர வித்தைக்காரர் பி.சி. சர்க்கார் ஜூனியர் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து அவர் குறிப்பிட்டிருந்த நாளில் முக்கிய பிரமுகர்கள் உட்பட பெருந்திரளானோர் யமுனைக் கரையில் திரண்டனர். நதிக்கு அப்பால் தாஜ்மகாலிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் நின்று கொண்டு தனது ஜால வித்தை மூலம் 2 நிமிடங்கள் திரண்டிருந்தவர்களுக்கு புலனாகாமல் தாஜ்மகாலை சர்க்கார் மறையச் செய்தார்.

இந்திர ஜால நிகழ்ச்சிகள் நடத்தும்போது மேடைக்கு கொண்டு வரப்படும் காரை மறையச் செய்து பின்னர் மீண்டும் தோன்றச் செய்யும் சர்க்கார் ஜூனியர் பாரிய கட்டடம் ஒன்றை மறைத்து பின்னர் தோன்ற வைத்தது இதுவே முதற்தடவை. (ஒ-8)


## வாழ்த்துகிறோம்

எமது பாடசாலை அதிபர் மதிப்பிற்குரிய

### செல்வி பா. மார்க்கண்டு

அவர்கள் அதிபர் தரம் i ற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளதையிட்டு அவரை உளமார வாழ்த்துகின்றோம் அவரது சிறந்த சேவை தொடரட்டும்.

ஆசிரியர் கழகம்.
அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்
யா/ கோண்டாவில்,
இந்து மகா வித்தியாலயம்.
(80396)



## மண்டேலாவில்

விற்பனையாகின்றது.

கணித, விஞ்ஞான, வர்த்தக மாணவர்களுக்கான அனைத்துப்பாட அலகுப் பயிற்சிகள்

( INCLUDED BIOLIGICAL SCIENCE )

தென்னிந்திய அனைத்து எழுத்தாளர்களின் கதை, கவிதை, அறிவியல், கணனி புத்தகங்கள்.

யாழ். நகரில் புத்தகப் பிரியர்களின் நண்பன்

### மண்டேலா புத்தக நிலையம்

இல. 2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(80379)



சிவமயம்

## இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நினைவுக் கவிதைப் போட்டி - 2000

### கவிமாமணி விருது

நிபந்தனைகள்

1. போட்டிக்கான கவிதைகள் மரபுக்குட்பட்ட யாப்புக்களிலேயே எழுதப்பட வேண்டும்.
2. போட்டிக்கான கவிதை எழுதுகின்ற திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.
3. போட்டியாளர் நேரில் வந்து போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்.
4. வயதுவரையறை இன்றி போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
5. பங்குபெற விரும்புவோர் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி முதலியன கொண்ட விண்ணப்பத்தை 13—11—2000 இற்கு முன்னர் கௌரவ செயலாளர், இந்து சமயப் பேரவை - யாழ்ப்பாணம். ஏழாலை மேற்கு, ஏழாலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
6. நடுவர்களின் முடிவே நிறைவானது.
7. விண்ணப்ப தபாலுறையில் இடது பக்கத்தில் ''ஆறுமுக நாவலர் கவிதைப் போட்டி — 2000'' எனக் குறிப்பிடுக.
8. அ) போட்டிக்கான தலைப்பு போட்டி நடைபெறும் மண்டபத்தில் கொடுக்கப்படும்.
   ஆ) போட்டியாளர் ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை ஆகிய யாப்பு வடிவங்களிலேயே எழுத வேண்டும்.

அருட்கவி. சீ. விநாசித்தம்பி — தலைவர்
சி. சக்திகிரீபன் — கௌரவ செயலாளர்

இந்து சமயப் பேரவை,
யாழ்ப்பாணம். (80235)

உ
சிவமயம்

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட

## ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் விநாயகர் தேவஸ்தானம்

## கொடியிறக்க உற்சவம்

விநாயகர் அடியார்களே!

விநாயகரின் மகோற்சவம் 9-5-2000 ஆரம்பமாகி நாட்டின் சூழ்நிலை காரணமாக அதனை நிறைவேற்ற திருவருள் கைகூடவில்லை.

எதிர்வரும் சனிக்கிழமை (11-11-2000) பௌர்ணமி தினத்தில் விநாயகப் பெருமானின் கொடியிறக்க வைபவம் இடம்பெறும்.

அன்று காலை 9 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகத்துடன் கிரியைகள் ஆரம்பமாவதோடு நண்பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

இதில் அடியார்கள் வந்து விநாயகரின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

(80372)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பொதுசன நூலகத்தின் முன்னாள் பிரதம நூலகரும் முதலாவது பட்டம்பெற்ற நூலகரும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபரும் இலங்கை நூலகச் சங்கத்தின் விரிவுரையாளரும் யாழ்ப்பாணத்தில் நூலகவியல் துறையை அபிவிருத்தி செய்வதில் முன்னின்று உழைத்தவருமாகிய

### கலாநிதி வே.இ. பாக்கியநாதன்

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ். பொதுசன நூலக
உத்தியோகத்தர்களும்,
பணியாளர்களும்.

(80377)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வன் பாலசுப்பிரமணியம் பிரதீபன்

(தீபன்)

மலர்வு 26 - 03 - 1978
உதிர்வு 28 - 09 - 2000

11 – 11 – 2000 சனிக்கிழமை

28 - 09 - 2000 அன்று அகால மரணமடைந்த எமது மகன் பாலசுப்பிரமணியம் பிரதீபன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாளை (11-11-2000) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

தகப்பன்: ஞா. பாலசுப்பிரமணியம்
(முத்துலிங்கம்)

28, கண்ணாபுரம்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(80333)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மாதாவின் மடியில்
05 — 08 — 1921

தேவனின் மடியில்
11 — 10 — 2000

### அமரர் டானியல் முருகேசு வேதநாயகம்

பாசமழை ஓய்ந்த தென்ன...
வாசமலர் வாடிய தென்ன......
நேசக்கரம் நீட்டிய தேவன் இன்று
மோசம் போனதென்ன விந்தை ஐயா!

எமது இல்லத்தில் இன்று 11 மணியளவில் நடைபெறும் எம் குடும்பத்தலைவரின் நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்

''அன்னம்'',
வதிரி, நெல்லியடி.

(80262)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்டுவரும் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை டிசெம்பர் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் நாளை சனிக்கிழமைக்கு முன்பு யாழ் உதைபந்தாட்ட செயலாளரை ஈச்சமோட்டையில் அமைந்துள்ள 'லீக்' பணிமனையில் சந்தித்து பரீட்சைக்கான விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## செய்முறைப் பரீட்சை

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் இருந்து ஜி.சி.ஈ (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சங்கீதம், விவசாயம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## வலி. தெற்கில் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வசிக்கின்ற மேலும் ஆயிரத்து 27 குடும்பங்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கும் பணி நேற்று ஆரம்பமாகின

சுன்னாகம் மக்கள் வங்கியில் வைத்து பணமாக இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இக் கொடுப்பனவைப் பெறத் தகுதியுடைய குடும்பங்கள் தத்தமது பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை ஆகியவற்றைச்சமர்ப்பித்து கொடுப்பனவைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறு வலி. தெற்குப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

கொடுப்பனவு வழங்கப்படவுள்ள திகதிகளும், பிரிவுகளும் வருமாறு:-

★ இன்று ஜே- 186 முதல் ஜே 193 வரை.
★ 14 ஆம் திகதி—ஜே-194 முதல் ஜே—198 வரை.
★ 15 ஆம் திகதி—ஜே-199 முதல் ஜே-206 வரை, ஜே-210. (ஐ-3-152)

## இடமாற்றம்

கொடிகாமம் அஞ்சல் அலுவலகம் தற்போது கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் உள்ள கட்டடமொன்றில் இயங்கி வருகிறது. இடம் பெயர்ந்துள்ள மக்கள் தமது கடிதங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

G.A.Q., ENGLISH LITERATURE

LECTURES BY:
S. PATHMANATHAN

Commencement
11 - 11 - 2000

(80290)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்

2000 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்

சித்தியெய்திய மாணவர்களையும், வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

| மாணவர்: | பெற்ற புள்ளி |
|---|---|
| த. கஜீவன் | 148 |
| இ. ரஞ்சித் | 143 |
| க. கார்த்திகா | 141 |

இடம்பெயர்ந்து எமது வித்தியாலயத்தில் கல்வி கற்றுச் சித்தியெய்திய

| | |
|---|---|
| பா. பகிதா | 159 |

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(80378)

## மரண அறிவித்தல்கள்

### தம்பு பொன்னுத்துரை

09- 11- 2000 பத்திரிகையில் [பக்கம் 10] பிரசுரமாகிய மேற்படி அறிவித்தலில் லதா (ஹொலண்ட்), விஜிதா (இந்தியா), சுஜாதா (இந்தியா) ஆகியோரின் பேரனுமாவார் என்பது தவறுதலாக விடுபட்டுள்ளது. இதனைச் சேர்த்து வாசிக்கவும்.

தகவல்:
பொன்னுத்துரை சிவலோகநாதன்

இராச வீதி,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய்.

(80359)

### திருமதி தெய்வானை அம்மா சிவசுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணை சிவப்பிரகாசம் வீதியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி தெய்வானை அம்மா நேற்று முன் தினம் (8 - 11 - 2000) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் ஐ. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய O A கச்சேரி, அனுராதபுரம்) அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் ரவீந்திரன் (U. S. A.), திருமதி ராகினி கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் அரவிந்தன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி). செல்வி உமா (ஆசிரியை, சிறுவர் பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற மா. கணேசலிங்கம் (A. R. M., மக்கள் வங்கி), திருமதி சிவமலர் ரவீந்திரன் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம், மருதலிங்கம் கதிரவேலு, ராசம்மா, லிங்கா மற்றும் திருமதி கமலம் கண்ணுத்துரை (கொழும்பு), சொர்ணலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (9 – 11 - 2000) வியாழக்கிழமை கோம்பயன் மணல் மயானத்தில் பி. ப. 2. 00 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஐ. சிவசுப்பிரமணியம்
(கணவர்)

123, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(80394)

### கந்தையா இராசரத்தினம் (ஓமான்)

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் (ஓமான்) அவர்கள் 06-11-2000 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா — இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமுத்து — இலட்சுமி தம்பதியினரின் மருமகனும் சிவபாக்கியத்தின் (இந்தியா) அன்புக் கணவரும சாந்தகுமாரி (லண்டன்), சர்வகுமாரி (பிரான்ஸ்), காந்தரூபன் (உமா —சுவிஸ்), கல்யாணி (லண்டன்), தேன்மொழி (லண்டன்), கேசரூபன் (லண்டன்), காலஞ்சென்ற மகேசரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கந்தையா விஜயமோகன் (லண்டன்), கந்தையா விஜயகுமார் (பிரான்ஸ்), வனிதா (சுவிஸ்), ஆகியோரின் மாமனாரும், செல்வரத்தினம் (ஆசிரியர்), சிங்கரத்தினம், கனகரத்தினம் (ராசா), சின்னமணி, கண்மணி, தங்கம்மா, காலஞ்சென்ற சரஸ்வதி, சின்னம்மா, பிள்ளையம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும், சண்முகம், சிவராசா, கருணாமூர்த்தி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), தெட்சணாமூர்த்தி, கமலாதேவி, சந்திராதேவி, புஸ்பலீலா, தேவி, பவானிதேவி, (ஹொலண்ட்), காலஞ்சென்றவர்களான முருகேசு, சிவரத்தினம், தம்பிஐயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
உறவினர்கள்

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(80376)

# உதயன்

## சுற்றுப் பயணம் செய்யும் பாடநூல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு, புத்தாயிரம் ஆண்டு முடிவுறும் தறுவாயிலும் இந்த வருடத்துக்கான 75 சத வீதமான பாடநூல்கள் விநியோகிக்கப்படவில்லை!

குறிப்பாக பத்தாம் ஆண்டு மாணவருக்கான விஞ்ஞானப் பாடநூல்கள் 75 சத விதமே யாழ்ப்பாணத்துக்கு இவ்வருடம் அனுப்பி வைக்கப்பட்டன. சமூகக் கல்வியும் வரலாறும் பாடநூல் 40 சதவிதமே வந்து சேர்ந்தன.

இதனால் குடாநாட்டு மாணவர்களின் கல்வி நிலை தொடர்பான சம வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அவர்களின் கல்வி பின் தங்கும் நிலை உண்டாகிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் விடுத்த அறிக்கையில் இந்தப் புள்ளி விவரங்களும் பாதிப்பும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

குடாநாட்டு மாணவரின் கல்வி நிலை கடந்த பல வருடங்களாக பல வகைகளாலும் பாதிப்புற்று வருகிறது. நாட்டின் ஏனைய மாவட்டங்களில் உள்ள கல்விசார் மற்றும் பௌதிக வளங்கள் ஒப்பீட்டளவில் இங்கு மிகவும் குறைவு.

இன்றைய கல்விப் போதனையிலும் பாடவிதானத்திலும் அரசாங்கம் அச்சிடும் பாடநூல்கள் முன்னர் இல்லாதவாறு பிரதான இடம் பெறுகின்றன. ஆனால் யாழ்ப்பாண மாணவர்களுக்குப் போதிய அளவில் விநியோகிக்கக் கூடியதாக அவை அனுப்பப்படுவதில்லை.

ஏனைய மாவட்ட மாணவர்களுக்கு முதலாம் தவணையின் முதலாவது வாரத்திலேயே பாடநூல்கள் கிடைத்துவிடுகின்றன. ஆனால் குடாநாட்டுக்கோ, எப்போது கிடைத்தாலும் பரவாயில்லை என்ற அசமந்தம் அதிகாரிகளிடம்

இந்த இலட்சணத்தில், யாழ்ப்பாண மாணவருக்கு கல்வி கற்றலில் எவ்வாறு சமவாய்ப்புக் கிடைக்கும்?

2001 ஆம் ஆண்டிற்கான பாடநூல்களாவது யாழ்ப்பாண மாணவருக்கு நேரகாலத்துடன், உரிய வேளையில் கிடைக்கும் என்று நம்ப முடியவில்லை. இந்த ஆண்டு முடிவடைவதற்கு இன்னும் சுமார் நாற்பத்தைந்து நாள்களே உள்ளன.

யாழ். மாவட்டத்தின் உயர் கல்வி அதிகாரிகள் இப்போது அடிக்கடி கொழும்புக்குச் சென்று வருகிறார்கள். எனினும் டிசெம்பர் மாதத்தில் பாடநூல்கள் இங்கு வந்து சேர்ந்துவிடும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை.

பாடநூல்கள் கொழும்பிலிருந்து திருகோணமலையில் உள்ள மாகாண சபைக்கு வந்து, பின்னர் மாவட்டங்களுக்கெனப் பிரிக்கப்பட்டு, மீண்டும் கொழும்பு 'பயணமாகி' அங்கிருந்து யாழ்ப்பாணம் வருகின்றன. யாழ்ப்பாண மாணவர்களின் பாடநூல்கள் இவ்வாறு ''சுற்றுப் பயணம்'' செய்வதை நிறுத்தி நேரே கொழும்பிலிருந்து வருவதற்குவசதி செய்யக்கூடாதா?

பாடநூல் வருகையி? நிலவும் தாமதத்தையும் பாதிப்பையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துச் சொல்லி விளக்க முடியாதா?

டிசெம்பர் இறுதி வாரத்துக்கு முன்னர் பாடநூல்கள் யாழ்ப்பாணம் வந்து சேருவதற்கு கல்வி அதிகாரிகள் தமது திறமைகளையும் கூட்டு முயற்சிகளையும் பயன்படுத்தக் கூடாதா?

# பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!

### ஞானக் கதிர்

### சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள்

மக்கள் மத்தியில் எச்சமயத்தவராயினும் எச்சமூகத்தவராயினும் தமது பிறந்த நாளைக் கொண்டாடுவதில் ஒரு தனி ஆர்வம். ஏழை முதல் பணக்காரர் வரை பிறந்த நாட் கொண்டாட்டம் பலதரப்பட்ட வகையிலே கொண்டாடப்பட்டு வருகிறது. பிறந்தநாள் எது என்று ஆராய்ச்சி செய்தனர் நம் அடியார்கள்.

ஆம் வினைப்போகமே, தேகமாகக் கொண்டு நாம் பிறந்தோம். ஆனால் ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்றபடி கிடைத்தற்கரிய மானுட ஜென்மத்தைப் பெற்றோம்! அதைப் பயன்படுத்துகின்றோமா? இல்லை.

அன்பு செய்தால் ஆண்டவனைப் பெறலாம். அவன் அருளைப் பெறுவதற்கும் அவன் துணையே வேண்டும். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்கின்றது திருவாசகம். இறைவன் திருநாமங்களைப் பேசுவதும், சிந்திப்பதும், உச்சரித்தலும் நல்வழியைக் காட்டும். இடைவிடாது எண்ணுகின்ற அந்தச் சிந்தனையே உயர்வை உண்டாக்கும். அதற்காகத் தான் இந்தத் திருநாமங்களை நமக்கும் நம் குழந்தைகளுக்கும், நிலையங்களுக்கும் இடுகிறோம்.

படிக்கும் மாணவர்கள் படிப்போடு நின்று விடலாகாது ஒழுக்கம் போற்றப்பட வேண்டும். ஒழுக்கத்தைப் பேண வேண்டும். ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பது வள்ளுவனார் வாக்கு. ஒழுக்கம் உடைமையே வாழ்வில் உயர்வு தருவது; அது உயிரினும் சிறந்தது. ஒழுக்கம் இல்லாதவன்உயர்வு அடைவது என்றும் இல்லை. ''வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்'' என்பது பழமொழி. நன்றாக ஒழுகினால் நன்மையே விளையும்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்'' என்ற வள்ளுவர் வாக்குப்படி வாழ வேண்டும். வாழ்வாங்கு வாழ்தல் என்ற தொடரைச் சிந்திக்க வேண்டும். அன்புடைமை இன்சொல் உடைமை, அடக்கம், ஒழுக்கம், பயனில் சொல்லாமை, கொல்லாமை முதலிய அறம் தழுவி வாழ வேண்டும். பயனற்ற சொல்லைப் பேசுகின்றவன் மனிதன் அல்லன்; அவன் பதடி; இது வள்ளுவர் வாக்கு.

''பயனில்சொல் பாராட்டு
வானை மகன் எனல்
மக்கட் பதடி எனல்''

உள்ளீடு இல்லாத நெல்லுக்குப் பதடி என்று பெயர். பயனில்லாதபேச்சுப் பேசுபவன் உள்ளீடுஇல்லாதவனே; அதாவது அறிவு இல்லாதவனே. முக்கியமாக மாணவர்கள்வெற்றுரை பேசித் திரியலாகாது. அறிவோடு பேச வேண்டும்; ஆழமாகப் பேசவேண்டும்; கூர்மையாகப் பேசவேண்டும்; பொருள் சேர்ந்த பேச்சாகப் பேச வேண்டும்.

இத்தகைய பயனுள்ள பேச்சு இருப்பின் ஒழுக்கத்தில் அடக்கம் என்ற பண்பு உதயம் ஆகும். அப்படி வாழ்ந்து அடக்கத்தோடு விளங்க வேண்டும்.

''அடக்கம் அமரருள்
உய்க்கும் அடங்காமை
ஆரிருள்உய்த்து விடும்''.

அடக்கம் இல்லாதவனை ஒருவரும் மதிக்க மாட்டார்கள். செருக்கு வாழ்வைச் சிதைக்கும். ஆணவம் அழகைக் கெடுக்கும். இறையருள் கிட்ட தடங்கல் செய்யும். ஆகவே பிறப்பின் பெருமையை உணர்பவனே பெரியவன்.

நாம் பிறந்த தினத்தைப் பல விதமாகக் கொண்டாடுகிறோம். மது, மாமிசம் அருந்தி நண்பர்களுடன் கூடிக் குலாவி மகிழ்ச்சியோடு ஆனந்தமாகக் கொண்டாடுகிறார்கள். உண்மையில் பிறந்த நாள் நமது வாழ்வில் இறந்த நாள் தானே. நன்றாகத் துருவித் துருவி ஆராய்ந்து சிந்தித்துப் பாருங்கள்; அப்பொழுது உண்மை தெளிவாகும்.

காலனாகிய தச்சன் நாள் என்ற வாளினால் அரியும் சட்டையே இந்தத் தேகம். ஆகவே ஒவ்வொரு நாளும் அது நம்மை அறுக்கும் வாள்' ''பெரும்பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்ற வாக்குப் பிரகாரம் நாம் இறையருளால் அவன் புகழைப் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் அவனுடைய அருள் வேண்டிப் பாடிக்கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு அவன் புகழ் பேசவும் பாடவும் அவன் அருள் கிடைத்தது யாம்செய்த புண்ணியம், யாம் செய்த பாக்கியம். ஆகவே அவன் அருளாலே அவன் தாள் பணிந்து இறையருள் பெற்றுய்வோமாக.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 10

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் புத்தாயிரம் ஆண்டுப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் செ. சிவநடராசா தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி கு இராஜேந்திர பிரசாத்தும், சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தனும் கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் க. ஆனந்தராசாவும் கலந்து கொள்வர்.

திருமதி கௌரி ராசேந்திரப் பிரசாத் பரிசில்களை வழங்குவார். (இ-3)

## புலிகள் தரப்பில் உயிரிழந்த மூவர்

வவுனியா, நவ. 10

பல்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த மூன்று உறுப்பினர்களின் பெயர் விவரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

★ மேஜர் ஓவியன்(கிருஷ்ண பிள்ளை சத்தியசுதன் — திருகோணமலை)

★ தணிகைச்செல்வன் (சுந்தரலிங்கம் தர்மரூபன் — யாழ்ப்பாணம்)

★ கருவேங்கை (விஜயன் சுரேந்திரன் — யாழ்ப்பாணம்) (இ-7)

## நாளை

ஐப்பசி 26
சனிக்கிழமை
திதி: பூரணை
பின்னிரவு 3.56 வரை.
நட்சத்திரம்: பரணி
பின்னிரவு 5 32 வரை
பூரணை விரதம்
எமகண்டம்: 3.06 4 36
ராகுகாலம்: 09.06 10.36
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பனை அபிவிருத்திச் சபையின் பணிகளை அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ 10

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச்சபை அலுவலகத்தின் பணிகளை அதிகரிக்குமாறு வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள சபை அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களை யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் செய்து சபையின் தலைமைச் செயலகத்தினை உத்வேகத்துடன் இயக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

பனை அபிவிருத்திச் சபையின் வேலணை, ஊர்காவற்றுறை, குடத்தனை, நெடுந்தீவு பகுதிகளில் மாதிரிப் பனம் தோட்டங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கு 2 லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

சாவகச்சேரி, பளைப் பிரதேசங்களிலும் மாதிரி பனம் தோட்டங்கள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டபோதும் அங்கு இடம் பெற்ற இடப்பெயர்வினால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் ஓமலக்காடு என்னும் பகுதியில 5 ஏக்கர் நிலப்பரப்பில் மாதிரிப் பனம் தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தோட்டத்தில் ஊடு பயிராக கஜு, பட்டிப்பூ போன்றவையும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவில் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்துடன் இணைந்து பனை உற்பத்தியின் மேம்பாடு தொடர்பான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

விவசாய பீட இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் சு. மோகனதாஸ் இதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இவருக்கு உதவியாகச் சபையின் சார்பில் க சிவகுமார் என்ற ஊழியர் அமர்த்தப்பட்டுள்ளார்.

பதநீர் உற்பத்திக்குச் சுண்ணாம்புக்குப் பதிலாக நாவல் பட்டை, நாவல் வேர், நாவல் விதைகளைப் பயன்படுத்துவது தொடர்பாக இவர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

மேலும் பனம் பாணியைப் பழுதடையாமல் நீண்ட நாள்களுக்கு வைத்திருப்பது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. (இ-5)

## சிலை திறப்பு விழா

மானிப்பாய், நவ. 10

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் பெரியர் சங்கரப்பிள்ளையின் சிலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க. சிற்றம்பலம் பிரதம விருந்தினராகவும் மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபைத் தலைவர் சட்டத்தரணி இரா. வசந்தசேனன், செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இதில் கலந்து கொள்வர்.

சிலை வடித்த சிற்பி துரை வீரசிகம் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார். (இ-90)

### உதயவாக்கு

வெற்றியின் பெருமைக்கு எல்லோரும் போட்டியிடுவர்; தோல்வியின் காரணம் பிறர் மீது சுமத்தப்படுகிறது.

- டேஸிடஸ்

## பொ. ஐ. முன்னணி எம். பியின் தெரிவை ஆட்சேபித்து மனு
### அதேகட்சி உறுப்பினர் நீதிமன்றில் தாக்கல்

கொழும்பு, நவ 10

கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய விமலவீர திசாநாயக்க வெற்றி பெறும் போது அரச சேவையில் இருந்தபடியால் அவரது தெரிவை ரத்துச்செய்ய வேண்டும் என்று கோரி அதே முன்னணி சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் பிரதி அமைச்சர் எச். எம். வீரசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

விமலவீர திசாநாயக்க தேர்தலில் போட்டியிடும் போது ஆசிரியராகப் பணி புரிந்தார் என்றும்—

தேர்தலில் போட்டியிடும் போது அவர் முறைப்படி தமது பதவியை ராஜினாமாச் செய்திருக்கவில்லை என்றும்—

இதன் காரணமாக அவரது தெரிவைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும் என்றும்—அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

(இ-3)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை

நவாலி நவ. 10

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் வயது வந்தோருக்கான போசாக்குத்திட்டத்தின் சான்றிதழ் வழங்கலும் பரிசில் வழங்கலும் நாளை சனிக்கிழமை 11 மணிக்கு பிரதேச செயலர் தா. வேதநாயகன் தலைமையில் நடைபெறும்.

(இ-100)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சிவஞானம் ஞானகுமாரன் என்பவரது தே.அ.அட்டை (இல. 680441 154v)யும், வி.அ.அட்டையும், தொழில் அ.அட்டையும்(**Job Card**) மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கும் மானிப்பாய் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் 70-212547 என்ற தொலைபேசியிலோ அல்லது சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி என்ற விலாசத்திலோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80306)

பாஸ்கரன் சோபனா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.795031928 V) விசேட அடையாள அட்டை (இல.0906021227), பல்கலைக்கழக அடையாள அட்டை (இல 98/A/174) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பாஸ்கரக்குருக்கள், கந்தசாமி கோயில் வீதி, இணுவில் எனும் முகவரியில் கொடுத்து உதவவும். (80347)

கோயில் வீதிக்கும் - வைமன் வீதிக்கும் இடையில் கைச்செயின் ஒன்று 05.11.2000 (ஞாயிற்றுக் கிழமை) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் A.ரஜனி, இல.09, 1ஆம் ஒழுங்கை,அரசடிவீதி, நல்லூர் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (80361)

பண்ணாலை தெற்கு, தெல்லிப்பழை என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா இரட்னேஸ்வரி என்பவரது தேசிய அ.அட்டை (இல.467 041 100V), விசேட அ.அட்டை (இல.09 07020759) ஆகிய இரண்டும் கடந்த 04.11.2000 அன்று மருதனார்மடம் பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செ.இரட்னேஸ்வரி, C/O S.ஜெயபவன், லவ் லேன், மல்வம் ஒழுங்கை, உடுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (80362)

உயரப்புலம் ஆனைக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த தியோ மரியதாஸ் என்பவரின் தேசிய அ. அட்டை (272660323V) ஆனைக்கோட்டைக்கும் சாவல்கட்டு சந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நேரில் அல்லது ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய பங்குத் தந்தையிடம் ஒப்படைத்துதவவும். (C/13765)

## வீடு விற்பனைக்குண்டு

நாகேந்திரமடம், அராலி வடக்கு எனும் முகவரியில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு:- தம்பித்துரை - தவநாயகி (**Post Master**), நாகேந்திரமடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (80364)

## விற்பனைக்கு

**NP GB 3494** இலக்கமுடைய புதிய ஓட்டோ, 202 தொடர் இலக்கமுடைய மற்றுமொரு ஓட்டோ,4 **SRI** தொடர் இலக்கமுடைய **VOLKS WAGON** கார் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 23, உடுவில் வீதி, மானிப்பாய். (80324)

பவுண் அடிக்கும் டைமெசின் (கசெற்றுகளுடன்), **NO. 3** டைமெசின (கசெற் இல்லாமல்) விற்பனைக்குண்டு. தொடர்பு: **V.V.** மகாலிங்கம், 157, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (80311)

மூன்று மாதம் நிரம்பிய பெண் அல்சேஷன் (கறுப்பு நிறம்) நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷ்ண மிஷன பாடசாலை அருகில்), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (80360)

## இலக்கியக் கட்டுரைகள்

**O/L** மாணவர்களது விருப்பப் பாடமான தமிழ் இலக்கியத்தைக் கற்கவும், கற்பிக்கவும் உதவக்கூடிய 38 கட்டுரைகள் சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் நான்கிற்கும் விளக்கங்கள் எழுதியுள்ளார் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. (80201)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081. (c/13637)


## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பமொன்றுக்கு வீடு தேவை. நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் ஆகிய இடங்களில் இருப்பது விரும்பத்தக்கது. தொடர்புக்கு: துலக்ஸ் வீடியோ (சந்திரன்), அன்னங்கை, உரும்பிராய் மேற்கு. (80342)

## களவாடப்பட்டுவிட்டது

ஒற்றைத்திருக்கல் உடைய **K.S. S.R.** பொறிக்கப்பட்ட (நீலநிறம்) ரயர்கள் பூட்டப்பட்ட வண்டில் ஒன்று 25.10.2000 அன்று சந்தன மாதா கோயில் லேன், புங்கங்குளம் எனும் முகவரியுடைய வீடொன்றிலிருந்து களவாடப்பட்டுள்ளது. இது பற்றித் தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து சி.செல்வரத்தினம் (வெள்ளை), 14, குறசட் லேன், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80358)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 - 09 - 1949

மறைவு 11 - 10 - 2000

**அமரர் தம்பிப்பிள்ளை யேசுதாசன்**

(அன்னை வேளாங்கன்னி ஸ்ரோர்ஸ், குருநகர்)

இல்லத்தின் தலைவனாய்
பாசத்தின் உறைவிடமாய்
நேசத்தின் இருப்பிடமாய்
எங்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த
எங்கள் அன்புத் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*14/4, யுவானியார் கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

(C/13763)

# பௌதிக விஞ்ஞான கற்கை நெறிக்கு மேலும் 33 மாணவர்கள் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான கற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்புப் பட்டியல் மூலம் 33 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

பி.கஜேந்திரா,பி.தவராஜா, வி.பிரபாகரன், ஆர்.செந்தூரன், ரி.துசாந்த், வி.வாசுகி, எஸ்.பாலச்சந்திரன், எஸ்.டி.யசோதரன், எஸ்.கஜநேசன், எஸ்.சசிதரன், எஸ்.சிவபிருந்தன், என்.தணிகைகுமரன், எஸ்.கோபிநாத்.

ஜி.செந்தூரன், எஸ்.வித்யா, எஸ்.மைதிலி, எஸ்.பத்மகாந்தன், ஆர்.பாமினி, ஜே.யசோதரன், எஸ். ஜெகந்தன், ஆர்.ராஜேஸ்வரன்,ஏ.ராமலிங்கம், பி.வரதராஜா.

எஸ்.தஜீதரன், பி.தர்சன், எஸ். குகன், எஸ்.சிந்குமரன், ஜி.ஜெயந்தன்,ஆர்.ஜெயமயூரன்,எம்.கோணேஸ்வரா, எஸ்.சதீசன், ரி.சுபேந்திரன், கே.ரட்ணகுமார்.

இந்த மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளரிடம் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

## சந்திரிகாவின் வாசஸ்தலம் மாற்றம்


ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் குடியேறி உள்ளார். ஜனாதிபதி சந்திரிகா இதுவரை பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ் தலமான அலரி மாளிகையில் வசித்து வந்தார்.

ரத்னசிறி விக்கிரமநாயக்க பிரதமராகி அலரிமாளிகையில் குடியேறுவதை அடுத்தே ஜனாதிபதி தனது உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்துக்குச் சென்றுள்ளார். (இ-3)

உ

# திருமண நல்வாழ்த்துக்கள்

மணமகன்
**வி.தயானந்தன்**
(தயா)



மணமகள்
**றாஜினி**

நேற்றுமுன்தினம் (08. 11. 2000) புதன்கிழமை திருமணபந்தத்தில் இணைந்த மேற்படி தம்பதியினரை இன்று போல் என்றும் வாழ நல்வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றோம்.

அராலி கிழக்கு,
அம்மன் கோயிலடி,
அராலி.

*வாழ்த்துவோர்*
நண்பர்களும்
**A/L விளையாட்டுக்கழகத்தினரும்**

(C/13759)


*ஓம் சாயிராம்*

# திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 26ஆம் நாள் நாளை (11.11.2000) சனிக்கிழமை பூரண திதியும், சுப நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுப தினத்தில் முற்பகல் 11.30 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

**திரு.திருமதி வை.நடராஜா**
**தம்பதிகளின்**
**செல்வப் புதல்வன் திருவளர் செல்வன்**
**கலாநிதி மணிவண்ணன்**
**(கண்ணன் )**
**அவர்களுக்கும்**



**திரு.திருமதி து.வைத்தீஸ்வரன்**
**தம்பதிகளின்**
**செல்வப் புதல்வி திருவளர் செல்வி**
**விஜிதா**
**(விஜி)**
**அவர்களுக்கும்**

சுவாமி திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்: வெள்ளவத்தை சபையர் ஹோட்டல்**
**செமிறமிஸ் மண்டபம்.**

**திரு.திருமதி வை.நடராஜா**
10, அரசடி லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

**திரு.திருமதி து.வைத்தீஸ்வரன்**
"யோகாலயா"
இந்துக் கல்லூரி முன்பாக,
மானிப்பாய்.

(இருவீட்டார் அழைப்பு)

(80365)


உ
*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ*

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 26ஆம் திகதி நாளை (11.11.2000) சனிக்கிழமை பகல் 10.49 முதல் 12.15 வரை வரும் மகர இலக்கினமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

**திரு.திருமதி சடாச்சரம் தம்பதிகளின்**
**புதல்வன்**
**திருநிறை செல்வன்**
**இராஜேந்திரன் (றங்கன்)**
**(சடாச்சரம் அன் சன்ஸ்**
**நகைத் தொழிலகம், தட்டாதெரு)**
**அவர்களுக்கும்**



**திரு.திருமதி நடராசா தம்பதிகளின்**
**புதல்வி**
**திருநிறை செல்வி**
**ஷர்மிளா (ஷர்மி)**
**அவர்களுக்கும்**

இறைவன் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம் (நாச்சிமார் கோயில்) திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமணத்தில் தாங்களும், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* அழைப்பு வழங்கத் தவறியிருந்தால் இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

**வரவேற்பு உபசாரம்:**

மணமகன் இல்லத்தில் 12. 11. 2000 பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

*தங்கள் நல்வரவை விரும்பும்*

**திரு.சரவணமுத்து சடாச்சரம்**
**குடும்பத்தினர்**
நிரந்த முகவரி: *951,கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.*
தற்காலிக முகவரி: *117, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.*

**திரு.திருமதி முத்துலிங்கம் நடராசாவும்**
**பாரியாரும்**
நிரந்த முகவரி: *45, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
தற்காலிக முகவரி: *அரசடி ஒழுங்கை தட்டாதெரு, யாழ்ப்பாணம்.*

(இருவீட்டார் அழைப்பு)

(80366)

# அஷ்ரப் பலியான ஹெலி விபத்துக்கு காலநிலை சீரின்மையே காரணம்!

## விசேட நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,நவ.10

அமைச்சர் அஷ்ரப் உட்பட பதினான்கு பேரின் உயிர்களைக் காவு கொண்ட ஹெலி விபத்துக்கு எதிரிகளின் தாக்குதலோ அன்றி சதி நாச வேலையோ காரணமல்ல என்றும் காலநிலை சீரின்மை காரணமாகவே விபத்து ஏற்பட்டதாகவும் விமானப் படையின் விசேட நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட இந்தக் குழு தனது இறுதி அறிக்கையில் இதனைத் தெரிவித்தது. இந்த அறிக்கை விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மாஷல் ஜயலத் வீரக்கொடியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் -

சாதகமற்ற காலநிலையே ஹெலி விபத்துக்குக் காரணம். இந்தச் சம்பவத்துக்கு எதிராளியின் தாக்குதலோ வேறு தொழில்நுட்பக் கோளாறுகளோ காரணமில்லை. ஹெலி மலையுடன் மோதி வெடித்துச் சிதறிய இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்துக்கு இடமான பொருள்கள் எவையும் கண்டெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# தனிமையில் வாழ்ந்த பெண் எரிந்த நிலையில் சடலமாக மீட்பு!

நெல்லியடி,நவ.10

பருத்தித்துறை பழைய உடையார் ஒழுங்கையில் உள்ள வீட்டில் மரப்பெட்டி ஒன்றில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராசசேகரம் ஞானாம்பிகை (வயது 50) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.இவர் வீட்டில் தனிமையில் வசித்துவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இவர் வசித்த வீட்டில் இருந்து புகைமண்டலம் வெளியேறுவதை அயலவர்கள் கண்டுள்ளனர்.ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் அங்கு எவரும் சென்று பார்க்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பெண்ணின் சடலம் மரப்பெட்டி ஒன்றில் எரிந்த நிலையில் காணப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்துக்கு நேற்றுக்காலை சென்று பார்வையிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் விடுத்த உத்தரவை அடுத்துச் சடலம் பிரேத மற்றும் மரண விசாரணைக்காக மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை மரண விசாரணையையும் பிரேத பரிசோதனையையும் நடத்தினார். பின்னர் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-3-109-117)

# இம்மாத உணவு நிவாரணம் இன்னும் வழங்கப்படவில்லை

## 1,16,000 மக்கள் பாதிப்பு!

நவம்பர் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணம் பத்து நாளாகியும் இன்னும் வழங்கப்படவில்லை என்று இடம் பெயர்ந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் குடாநாட்டு மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுவது வழக்கம்.

நவம்பர் மாதத்துக்குரிய நிவாரணம் உரிய நேரத்தில் வழங்கப்படாமையினால் இந் நிவாரணத்தை நம்பி வாழும் ஒரு லட்சத்துப் பதினாறாயிரம் குடும்பங்கள் நிவாரணம் இன்று வழங்கப்படலாம் நாளை வழங்கப்படலாம் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைகின்றனர்; பாதிப்படைகின்றனர்.

நிவாரணம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து யாழ்.செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது அரச களஞ்சியப் பொறுப்பாளர் குருநகர் களஞ்சியத் திருட்டு தொடர்பாக நீதிமன்ற விசாரணையில் இருப்பதினால் நிவாரணத்தை வழங்க முடியாதிருப்பதாகக் கூறினார்.

மாற்று ஏற்பாடு எதுவும் செய்யாதது ஏன் என்று கேட்டபோது இப்போதைய சூழ்நிலையில் அதனைச் செய்வதில் நிர்வாகச் சிக்கல்கள் உள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-5)

### 3 சடலங்களும் புலிகளிடம் ஒப்படைப்பு

நாகர்கோயில் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்ததாகத் தெரிவித்து யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட மூன்று சடலங்களும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரிகளால் நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

குருநகர் இறங்குதுறையில் வைத்து படை அதிகாரிகளால் செஞ்சிலுவைப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலங்களை செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரிகள் படகு மூலம் எடுத்துச் சென்று கல்முனையில் வைத்து விடுதலைப் புலிகளிடம் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### வணிகர் மன்ற கூட்டம்

சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை முற்பகல் 11.00 மணிக்கு கரவெட்டி அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் இயங்கும் மன்ற அலுவலகத்தில் நடைபெறுமென செயலாளர் வ.இராசதுரை அறிவித்துள்ளார். (ஐ-117)

### பயிற்சிநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவின் புதிய பயிற்சி நெறிகள் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-10)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.பல்கலைக்கழக சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

'மதமும் மனிதனும்' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் தலைமையுரையை யாழ்.பல்கலைக்கழக பொருளியற் துறைத தலைவர் ப.சிவநாதனும் தொடக்கவுரையை யாழ்.போதனா வைத்திய சாலை டாக்டர் சி.குமரவேளும் நிகழ்த்தவுள்ளார். (ஐ-10)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.பாலர் கல்விக்கழகத்தின் 35 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு அரங்கில் கழகத் தலைவர் இ.தவகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

15 பாலர் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் முதன்மை விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும்,சிறப்பு விருந்தினர்களாக வெளிக்கள உத்தியோகத்தர் ஏ.ஸ்ரீஸ்கந்தராஜா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் சோ.பத்மநாதன்,சர்வோதய இணைப்பாளர் எஸ்.சிவசுப்பிரமணியம், செல்வி சிவகௌரி குணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-10)


ஈவினையில்....

கற்பகப் பிள்ளையார் சனசமூக நிலைய ஆதரவில்

We Serve

உடுப்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

**இலவச மருத்துவ முகாம்**

இடம் : ஈவினை கற்பகப்பிள்ளையார் சனசமூக நிலையம்

காலம் : 12.11.2000 ஞாயிற்றுக்கிழமை

காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை

மேற்படி முகாமில்...

* கண்பரிசோதனை * நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை

* இரத்த அழுத்த பரிசோதனை * நீரிழிவுப் பரிசோதனை

என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்

கண் பரிசோதனை:-

லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ M.J.F.

வைத்திய நிபுணர்களும், மருத்துவபீட மாணவர்களும் இந்தப் பரிசோதனையை நடத்துவர்.

அனைவரும் வருக! பயன் பெறுக!

லயன் வ.ஆறுமுகம், தலைவர்.

லயன் அ.க.த.கிருஷ்ணராசா, செயலாளர்

(80402) அன்பளிப்பு:- ஈவினையூர் கரிகரன்



**கண்ணீர் அஞ்சலி**

ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் கோயில்

பரிபாலன சபைத் தலைவர்

திரு.பொன்னுத்துரை சிவலிங்கம்

அவர்களின் மகன்

செல்வன் சிவலிங்கம் சத்தியகுமார் (சிவா)

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.* (80383)

தேவஸ்தான பரிபாலன சபையினர்.



**31ஆம் நாள் நினைவஞ்சலி**

எமது சங்க உபதலைவர் திரு.செ.செல்வரட்னம்

(செயலாளர், நல்லூர் பிரதேச சபை)

அவர்களின் தந்தையார்

அமரர் இ.செல்லையா

அவர்களின் மறைவை முன்னிட்டு இன்றைய 31ஆம் நாளில் அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(80388)



**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

"முயற்சி"

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

சுயதொழில் வேலைவாய்ப்பு பயிற்சித்திட்டம்

பயிற்சி நெறி :- புத்தகம் கட்டுதல்

காலம் :- 3 மாதம் (சனி, ஞாயிறு)

தகைமை :- க.பொ.த (சா.த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 20.11.2000

* பயிற்சிநெறிக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

* பயிற்சிநெறி ஆரம்பம் :- 02.12.2000

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :-

தலைவர்,

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,

மானிப்பாய் வீதி,

உடுப்பிராய்.

(C/13774)



**மரண அறிவித்தல்**

நடராசா ராசநாதன்

கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த நடராசா ராசநாதன் அவர்கள் நேற்று (09/11/2000) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு நடராசா மற்றும் சிவயோகம் ஆகியோரின் அன்பு மகனும், சுகுணமதியின் அன்புக் கணவரும், அகிலாண்டநாயகி (பெரியகிளி - வன்னி), சின்னக்கிளி (சாவகச்சேரி), இராசேந்திரம் (கனடா), தங்கேஸ்வரி (கனடா), செல்வமுருகன் (கனடா), பேரின்பநாதன் (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், அஜந்தன், சுஜந்தினி, விஜயதர்சினி, சுகந்தினி, தினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :

சின்னக்கிளி (சகோதரி)

ரயில்வே லேன், கச்சாய் வீதி,

சாவகச்சேரி,

*துரை வீதி, இணுவில்.*

நாதன் (மைத்துனர்)

(80401)



**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் இன்று ஐப்பசி 25 ஆம் நாள் (10.11.2000) வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிமுதல் 9.00 மணிவரையுள்ள சதுர்த்தசி திதியும் அச்சுவினி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுப முகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
நரேந்திரன்
அவர்களுக்கும்




எமது புத்திரி
திருநிறை செல்வி
தாட்ஷாஜினி
அவர்களுக்கும்

அம்பாள் துணைகொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம் "Sri Shenpaga Vinayagar Temple"

19, Ceylon Road, Singapore - 429613.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

திரு.திருமதி சண்முகரட்ணம் ஐயர்
(நரேன் வீடியோ)
140, வண்ணை ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோயில்,
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

திரு.திருமதி சிவகுமாரன்
இந்திரன் அம்மன் கோயில்,
துன்னாலை வடக்கு, கரவெட்டி,
இலங்கை.

(C/13777)

## அவசர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவே சபையில் முன்வைத்தார்.

ஈ.பி.டி.பி., இலங்கைத் தொழிலாளா காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி ஆகியன பிரேரணையை ஆதரித்து வாக்களித்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜே.வி.பி., சிஹல உறுமய, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பின்போது சபையில் இருக்கவில்லை.

பிரேரணை மீதான விவாதம் காரசாரமாக இடம்பெற்றது. இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டது. (ஐ-8-3-ரி)

## தமிழறிஞர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழகேசரி பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய இவர் 1942 முதல் 1947வரை இலங்கை வானொலி தமிழ்ச் சேவைக் கட்டுப்பாட்டாளராகவும் பணிபுரிந்தார். 1940 இல் பி.பி.ஸியின் தமிழோசை நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டபோது சிவபாதசுந்தரம் அந்நிகழ்ச்சிக்குத் 'தமிழோசை' என்ற பெயரைச் சூட்டினார்.

சிறந்த எழுத்தாளரும் இலக்கியவாதியுமான அமரர் சிவபாதசுந்தரம் தமிழ் நாவல் வரலாறு, சிறுகதை நூற்றாண்டு நூல்கள் உட்பட பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அவர் கடைசியாக எழுதிய 'சேக்கிழார் தமிழ்' என்ற நூல் இந்தியாவிலும் உலகத் தமிழர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

லண்டனில் இவ்வருடம் ஏப்ரலில் நடைபெற்ற புத்தாயிரமாண்டு முத்தமிழ் விழாவில் அமரர் சிவபாதசுந்தரத்துக்கு 'தமிழ்ப்பேரறிஞர்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தனது 88 ஆவது வயதில் அந்த விருதை பெற்றுக்கொண்ட அவர் அங்கு சுமார் 15 நிமிடநேரம் உரையாற்றி இருந்தார். தனது பத்திரிகை மற்றும் கலைப்பணிகளை நினைவு கூரும் வகையில் அமைந்த அவரது உரை அனைவரையும் கவர்ந்தது. (ஐ-6)

# அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு,நவ.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையில் பொலீஸ் காவல் நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.50 மணியளவில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அருகில் அமைந்துள்ள பொலீஸ் காவல் நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் -

உடனடியாக அங்கு மேலதிகப் பொலீஸார் அனுப்பப்பட்டதை அடுத்து விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## தவராஜா.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அக்கட்சியைச் சேர்ந்த எஸ்.தவராஜா நியமிக்கப்பட்டார். இவருக்கு விரைவில் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-8-ரி)

# விடுதலைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிய விடயத்தைத் தீவிரமாக ஆராய வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் நோர்வே தலையிட்டு, விடுதலைப் புலிகளின் நிபந்தனைகள் எவை என்று கூறினால், சகல கட்சிகளுடனும் கலந்துரையாடித் தீர்மானத்துக்கு வருவதே எனது எண்ணமாகும்.

அதுவரை பயங்கரவாத யுத்தத்துக்கு புதிலடி கொடுக்கும் திட்டம் எவ்வகையிலும் கைவிடப்படமாட்டாது.

அரசியல் தீர்வுக்காக அவசரமான செயற்பாடுகள் சிலவற்றை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதற்கமைய வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் வடக்கு - கிழக்கில் உள்ள சகல இன மக்களின் பிரதிநிதிகள் அங்கம்பெறும் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்க அரசு கருதியுள்ளது.

இந்த நாட்டைப் பிரிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கமாட்டோம். பாஸிச வெறிபிடித்தவர்களின் பிடியில் உள்ள மக்களை விடுவிக்கப் படையினர் போராடி வருகின்றனர். அந்தப் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதே எமது எண்ணம்.

அதிகாரப் பகிர்வுக்குரிய அரசமைப்பு ஒன்றின் மூலம் யாருக்கு அதிகாரத்தைப் பகிரப் போகிறீர்கள் என்று கேட்கின்றனர். இது விடுதலைப் புலிகள் பற்றியதே. ஜனநாயக முறையில் சேர்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு உள்ள வாய்ப்புக்களை நாம் எவ்வகையிலும் தடைசெய்யவில்லை.

அந்த இயக்கத்துடன் பேச்சு நடத்தத் தயாராகவுள்ளோம். ஆயினும் பேச வேண்டிய விடயங்கள் யாவை என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.

பேச்சு என்ற முறையில் புலிகள் பொருள் தட்டுப்பாட்டை நீக்குதல், உணவுகளை அனுப்புதல் போன்ற அவர்களுக்குப் பயன்படும் கோரிக்கைகளை விதிப்பதால் எதுவித பயனும் கிடைக்கப்போவதில்லை. ஏனெனில் இவை ஏற்கனவே எங்களால் மேற்கொள்ளப்படும் விடயங்களாகும்.

### புனரமைப்புக்குத் தனி அமைச்சு

யுத்தத்தால் அழிந்த வடக்கு - கிழக்கை புனரமைப்பது முக்கிய பணி. அதற்கு புதிய அமைச்சு உருவாக்கியுள்ளதுடன் ஆயுதம் தாங்கிய அரசியலைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த தமிழ் அரசியல் கட்சி ஒன்றின தலைவருக்கு அந்த அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளேன்.

எனவே எங்களுடன் விடுதலைப் புலிகள் உறுதியான அரசியல் விடயங்கள் குறித்தே பேச்சு நடத்த வேண்டும்.

பிரதான சிறுபான்மையினரான தமிழர்கள் வடக்கு - கிழக்கில் வாழ்வது போன்று நாட்டின் சகல இடங்களிலும் வாழ்கிறார்கள். தமிழ் மக்களின் கண்ணோட்டத்தில் நோக்கினால் வடக்கு - கிழக்கில் மாத்திரம் தனியரசு ஒன்றை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கப்போவதில்லை.

அனைத்து இன மக்களுக்கும் விடுதலை கிடைக்க ஒரே வழி ஐக்கியமான நாடு ஒன்றுக்குள் சகலரும் சகோதரர்களாக வாழ்வதேயாகும்.

எனவே ஐக்கியமான நாடு ஒன்றுக்குள் அதிகாரப் பகிர்வு ஒன்றை முன்வைப்பதே சிறந்த மாற்று வழியாகும். இந்த வழிக்குப் புலிகள் வரவேற்பு அளிக்க வேண்டியுள்ளது.

### திறந்துள்ள கதவுகள்

அதற்காகவே எந்தவொரு கதவினையும் மூடாமல் திறந்து வைத்திருக்கும் பொறுப்பினை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

நோர்வேயின் தலையீட்டை நாம் வரவேற்று உதவ முன்வந்தோம். இதுவே புலிகளுடன் நாம் பேச்சு நடத்த அக்கறையாக இருப்பதற்குச் சான்றாகும்.

தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் கொள்கையில் மாற்றம் எதுவும் எமக்கில்லை.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நாம் கொண்டுள்ள அக்கறைக்கு தெளிவான ஆணையை கடந்த ஏழு ஆண்டு காலத் தேர்தல்களில் மக்கள் தந்திருந்தனர் - என்றார். (அ-3-6)

## நாடாளுமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள சுதந்திர விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீது அரசு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்காது இருப்பதை எதிர்த்தும் - இந்தப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக ரெலோ முதல்வர் என். ஸ்ரீகாந்தா தெரிவித்தார். (ஐ-8)

## பயணச் சீட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே 9ஆம், 14ஆம் திகதிகளுக்குரிய கப்பல் சேவைக்கென யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் அவற்றைச் சமர்ப்பித்து நாளை பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பயணத்துக்கான திகதியை யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்றவர்களுக்கு அதன பின்னர் பயணச்சீட்டு வழங்கப்படும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பயண அனுமதிப்பத்திரம் வழங்கும் பணிகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். பாதுகாப்பு அனுமதியை சரிபார்க்கும் பணியும் அன்று ஆரம்பிக்கப்படும் என்றும் யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் விமானச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான பயண ஏற்பாடுகளையும் வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையே மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3-5-139)

## பெருமாள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்கவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொண்டதன் பேரில் பொ.ஐ.முன்னணியின் தேசியப்பட்டியலிலும் தனது பெயரைச் சேர்த்துக்கொண்டார். எனினும் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த பெருமாள் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பியுள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## யானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ஜனாதிபதி உரையாற்றிய சமயம் உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருந்து அதனைச் செவிமடுத்தனர்.

நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி அங்கிருந்து திரும்பிய சமயம் தமது சகோதரரும் சபாநாயகருமான அனுராவை கட்டி அணைத்து முத்தமிட்ட காட்சி அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

நேற்றைய அமர்வில் கலந்து கொண்ட ஐ.தே.க உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து வந்திருந்தனர்.

வெளிநாட்டுத் தூதுவர்கள், தூதரக அதிகாரிகள் ஆகியோரும் நேற்றைய அங்குரார்ப்பண நிகழ்வில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். (ஐ-3)

# யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் உணவு, மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு என்று மகேஸ்வரன் கூறியது அவரது கற்பனையில் உதித்த விடயம். அங்கு உணவு, மருந்து வகைகள் தாராளமாக உள்ளன என்பதை அரச அதிபரிடம் கேட்டால் தெரியும். 20 வருடமாக மக்கள் துன்பங்களை அனுபவிப்பதாக அவர் கூறுகின்றார். ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலா அது தொடங்கியது? - என்று கேட்டார்.

அதனைத் தொடர்ந்து இருவருக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது.

மகேஸ்வரனுக்கு ஆதரவாக ஐ.தே.க. எம்.பிக்கள் கோஷம் எழுப்பினர். தவராஜாவுக்கு ஆதரவாக அரச எம்.பிக்கள் கோஷம் எழுப்பினர். சபையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தலையிட்டு அமைதியை நிலைநாட்டினார்.

ஈ.பி.டி.பி.உறுப்பினர் தவராஜாவுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஒரு நிமிடம் மட்டுமே இருந்தது. அப்போது அவர் எழுந்து -

மகேஸ்வரன் ஒரு வியாபாரி. அவர் வியாபாரத்துக்காகவே உணவுத் தட்டுப்பாடு என்று சொல்கிறார். அங்கு உணவுத் தட்டுப்பாடு இல்லை - என்று கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலரும் தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்கிப் பேசமுடியாது என்று ஒரே குரலில் கோஷம் எழுப்பினர். மீண்டும் சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

இந்த நிலையில் தலையிட்ட சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தனிப்பட்ட முறையில் பேசியதை நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து நீக்குவதாகத் தெரிவித்ததை அடுத்து அமைதிநிலை ஏற்பட்டது.

பேச ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்த நிலையில் தவராஜா அமர்ந்தார்.

அதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி பேசுகையில் -

நாங்கள் நியமன எம்.பிக்களாக இங்கு வரவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்டே வந்துள்ளோம். அரசுக்குள்ளேயே ஆயுதக்குழுவும் இயங்குகின்றது. தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், பத்திரிகையாளர் நிமலராஜன் ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றின் பின்னராவது தமிழ்க் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய அரசு முனையவில்லை - என்று தெரிவித்தார்.

அவ்வேளை குறுக்கிட்டு கூட்டணி எம்.பியின் குற்றச்சாட்டை தவராஜா மறுத்து அவற்றுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று கூறினார். அதனைத் தொடர்ந்து சுமார் ஐந்து நிமிடம் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றது. சபை மீண்டும் அமளி துமளிப்பட்டது. சபாநாயகர் மீண்டும் மிகவும் கஷ்டப்பட்டு அமைதியை நிலைநாட்டினார். (அ-3-8)


புலமைப்பரிசில் திட்டம்
2001

விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கு பாத்திரமான எமது புலமைப்பரிசில் திட்டம் 1ம் திகதி முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி புலமைப்பரிசில் ஊடாக அடுத்த 3 வருடங்களில் தகவல் தொழில்நுட்பத்துறையில் (IT) நீங்கள் ஓர் பட்டதாரியாகும் சந்தர்ப்பம்

விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகங்களிலும், உங்கள் பகுதிகளில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி :
25/11/2000

IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



NCCA மாதிரிப் பரீட்சை

இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும் NCCA பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு மாதிரிப் பரீட்சை ஒன்று எமது நிறுவனத்தினால் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் ரூபா.150 செலுத்தி உங்கள் பதிவுகளை 16ஆம் திகதிக்கு முன்னதாக எமது அலுவலகத்திலோ அல்லது யாழ்.மத்திய கல்லூரி கணனிவள நிலையத்திலோ மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS,
JAFFNA.
(C/13775)



BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
A/L 2001/2002
நாடகமும் அரங்கியலும்
ஆசிரியர்
திரு.ஜோண்சன்
ஆரம்பம்: 11.11.2000
சனி 7.30
(80399)



நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2001
PAPER CLASS
ஆரம்பம்: 10-11-2k
Wed., Fri. 5-6 p.m.
அலகுரீதியான மீட்டலுடன்
Chemistry - அன்பு

| | | |
|---|---|---|
| Organic | Mon. Thu. | 5-6 p.m. |
| Inorganic | Wed. Fri. | 4-5 p.m. |

(80338)



நாளை ஆரம்பம்....
A/L 2002
"இருப்பு மதிப்பிடல்"
கணக்கீடு
D.SAM
3.00 மணி
பிரத்தியேகம்
76/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (C/13767)



முழு நிலா கருத்தரங்கு

கருப்பொருள் :- "சிறுவர்களை வழிநடத்துவதில் பெற்றோரின் பங்கு"

கருத்துரை வழங்குபவர் :- திருமதி ஒலிவற் ஜெனோவா அல்பிரட்

(சிறுவர் நிகழ்ச்சித் திட்டஅலுவலர், சிறுவர் பாதுகாப்பு U.K)

காலம்: நாளை (11.11.00) நேரம்: 3.30 (இ.நே)

இடம்: "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையம், 131, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

வருகை தந்து பலன் பெறுவீர்... - இயக்குநர்
(80363)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
முழுநிலா நாள் கருத்தரங்கு

இடம் :- கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.
காலம் :- நாளை (11.11.2000) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி.
தலைமை :- திரு.கே.எஸ்.குகதாசன் (முன்னாள் அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)
கருத்துரை :- 'நேற்று இன்று நாளை'
வழங்குபவர் :- திரு.மு.திருநாவுக்கரசு (முன்னாள் மாவட்ட நீதிவான்)

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.

ஆதரவு:- பாரதி பதிப்பகம்
430 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:-3081
(C/13778)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.